**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சாத்தான்குளம்.**
**முன்னிலை : செல்வி.ம.வி.தேவி ரக்க்ஷா, B.B.A.,LL.B (Hons).,**
**நீதித்துறை நடுவர், சாத்தான்குளம்**
**2026 ஆம் ஆண்டு, ஜுன் மாதம் 05 ஆம் நாள் வெள்ளிக்கிழமை**
**Crl.M.P.No.609 of 2026**
*********

ஆல்வின், வயது 32,
த/பெ. மோசஸ்,
88 F, பெத்தானியா நகர்,
நாசரேத். ...மனுதாரர்/வாகன உரிமையாளர்/நிகழ்நிலை புகார்தாரர்

...எதிர்...

**அரசுக்காக :-**
காவல் உதவி ஆய்வாளர்,
நாசரேத் காவல் நிலையம்,
குற்ற எண்.70/2026,
பி.ஆர்.எண்.185/2026. ...எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர்

இம்மனு இ.கு.பா.ச. பிரிவு 497 இன் கீழ் வழக்கு சொத்தை இடைக்கால பராமரிப்புக்காக கொடுக்கக்கேட்டு மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
மனுதாரர் வழக்கறிஞர் : திரு. பஞ்சாப் சேகர்
எதிர்மனுதாரர் வழக்கறிஞர் : செல்வி. பிரீத்தி ராணி., உதவி அரசு வழக்கறிஞர்.

**உத்தரவு**

1. மனுதாரர்/வாகன உரிமையாளர்/புகார்தாரர், அவருக்கு சொந்தமான TN 92 K 5958 என்ற பதிவெண் கொண்ட Honda Activa 125 DISC இருசக்கர வாகனத்தை, எதிர்மனுதாரர் காவல் நிலைய குற்ற எண்.70/2026, பாரதிய நீதிச்சட்டம் பிரிவு 303(2) இன் கீழான வழக்கில் எதிர்மனுதாரர் காவல் நிலையத்தால் கைப்பற்றப்பட்டுள்ளது என்றும், மேற்படி வாகனம் காவல் நிலையத்தில் திறந்த வெளியில் நிறுத்தப்பட்டு மழையிலும் வெயிலிலும் கிடப்பதால் அதன் பயன்பாட்டு தன்மை மிகவும் பாதிக்கக்கூடிய அளவில் ஆகிவிடும் என்றும், இதனால் மனுதாரருக்கு அளவிட முடியாத கஷ்ட நஷ்டம் ஏற்படக்கூடும் என்றும், மேற்படி வாகனத்தை மனுதாரர் வசம் ஒப்படைக்கும் பட்சத்தில், வாகனத்தை விற்பனை செய்யவோ, உருமாற்றம் செய்யவோ அல்லது வேறு எந்த வில்லங்கத்திற்கும் உட்படுத்தவோ மாட்டேன் என்றும், வாகனமானது அவருடைய தம்பி வீட்டில் நின்றதால் அவர் புகார் அளித்ததாகவும், நீதிமன்றம் உத்தரவிட்டால் உடனடியாக நீதிமன்றத்தில் மேற்படி வாகனத்தை ஆஜர் செய்ய தயாராக இருப்பதாகவும் கூறி, மனுதாரர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

2. இந்த வழக்கின் சொத்தான TN 92 K 5958 என்ற பதிவெண் கொண்ட Honda Activa 125 DISC இருசக்கர வாகனத்தை அதன் உரிமையாளரிடம் ஒப்படைத்தால் அவர் அதனை விற்கவோ அல்லது அழிக்கவோ அல்லது உருமாற்றம் செய்யவோ வாய்ப்புள்ளது என்றும், மேலும் அவர் வழக்கின் சொத்தினை வழக்கு விசாரணையின்போது நீதிமன்றத்தில் ஆஜர் செய்யமாட்டார் என்றும் கூறி, எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டது.

3. இரு தரப்பிலும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் அனைத்தும் பரிசீலிக்கப்பட்டன. வழக்கு சொத்தான TN 92 K 5958 என்ற பதிவெண் கொண்ட Honda Activa 125 DISC இருசக்கர வாகனம் மனுதாரருக்கு சொந்தமானது என்பது, மனுதாரர் தாக்கல் செய்துள்ள வாகனத்தின் பதிவு சான்றிதழ் நகல் மூலம் தெரியவருவதாலும்,

DEVI RAKSHA M V Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.06.05 17:45:24 +0530

Sundara Bai Ambalal Desai -Vs- State of Gujarat 2003 SCC Crl. 1943 என்ற உச்சநீதிமன்ற தீர்ப்பின் படியும், வாகனம் வெயில், மழை போன்ற இயற்கைச் சீற்றங்களால் இயந்திரக் கோளாறு ஏற்பட்டு அழியக்கூடிய சூழ்நிலை ஏற்படும் என்பதைக் கருத்தில் கொண்டும், மனுதாரருக்கு தக்க நிபந்தனையின் பேரில் வழக்கு சொத்தை இடைக்காலமாக திருப்பிக் கொடுப்பது நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந்நீதிமன்றம் கருதுவதால், வழக்கு சொத்தை மனுதாரர் வசம் இடைக்காலமாக திருப்பிக் கொடுக்க கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் உத்தரவிடப்படுகிறது.

**நிபந்தனைகள்:**

1. மனுதாரர்/வாகன உரிமையாளர்/புகார்தாரர் ரூ.50,000/- க்கு சொந்த பிணை எழுதிக் கொடுக்க வேண்டும்.
2. மனுதாரர்/வாகனஉரிமையாளர்/புகார்தாரர் வழக்கு சொத்தை விற்கவோ, உருமாற்றம் செய்யவோ, அடமானம் வைக்கவோ கூடாது.
3. இந்நீதிமன்ற தலைமை எழுத்தர் முன்னிலையில் வழக்கு சொத்தை புகைப்படம் எடுத்து பஞ்சநாமா தயார் செய்து இரண்டையும் இணைத்து வழக்கு கோப்பில் இணைக்க வேண்டும்.
4. வழக்கு விசாரணையின்போது மனுதாரர் வழக்கிடைச் சொத்துக்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த வேண்டும்.

இந்த உத்தரவு, என்னால் இன்று 05.06.2026 ஆம் தேதி திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

DEVI RAKSHA M V Digitally signed by DEVI RAKSHA M V Date: 2026.06.05 17:45:27 +0530

நீதித்துறை நடுவர்,
சாத்தான்குளம்.

Visit **ecourts.gov.in** for updates or download mobile app “**eCourts Services**” from Android or iOS